பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 21 திங்கட்கிழமை (06-09-1993) UTHAYAN—A Lively National Tamil Daily இதழ் 282

# விமானத் தாக்குதல்களை தடுக்கும் அளவுக்கு புலிகள் பலமடைவர்

## இராணுவ வட்டாரங்களில் கருத்து

கொழும்பு, செப்டெம்பர் 6

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடத்தப்படும் விமானத் தாக்குதல்களைத் தடுக்கக் கூடிய அளவுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் பலமடையலாம்.

இராணுவ வட்டாரங்களில் இத்தகைய ஒரு கருத்து நிலவுவதாக அந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி "த ஐலண்ட்" பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

தமது விமான எதிர்ப்புத் திறமையை கட்டி எழுப்பும் முயற்சியில் விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் ஈடுபட்டு இருப்பதாகவும் இராணுவ அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்ததாக அதே செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"த ஐலண்ட்" பத்திரிகை வெளியிட்ட செய்தியில் இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பருத்தித்துறைக் கடலில் விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதலுக்கு இலக்கான 'டோரா' பீரங்கிப் படகில் இருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றிய 20 மி.மீ. இரட்டை பீரங்கி (Twin 20 M.M. Cannon) விமானங்களைத் தாக்கும் சக்திவாய்ந்தது ஆகும்.

இந்த 20 மி.மி. பீரங்கிக்குத் தேவையான வெடிமருந்துகளை கணிசமான அளவு

(3 ஆம் பக்கம் பார்க்க)

தெற்கில் உள்ளவர்கள்

## புலிகள் பற்றிய தவறான கருத்தை போக்க யாழ்.வந்துபார்க்கவேண்டும்

### அன்ரன் பாலசிங்கம் பி. பி. ஸிக்கு பேட்டி

லண்டன், செப். 6

தெற்கில் உள்ளவர்கள் விடுதலைப் புலிகள் பற்றி தவறான கருத்தைக் கொண்டுள்ளனர். அவர்கள் யாழ்ப்பாணம் வந்து பார்க்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பி. பி. ஸி. கொழும்புச் செய்தியாளர் பியாக்கா நாஸுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளை நம்ப முடியாது என்ற அபிப்பிராயம் தெற்கில் நிலவுகிறதே என்ற கேள்விக்கு கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பதில் அளிக்கையில்,

'அது தவறானது. அமைதியை விரும்பும் அரசியல் அமைப்புகளும், இயக்கங்களும், சிங்கள

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை துறைமுகத்தில் குமாரி, றுகுணு கப்பல்கள்

### பொருள்கள் இறக்கும் வேலை ஆரம்பம்

வடமராட்சி, செப். 6

கடந்த ஏழு நாட்களின் பின்னர் நேற்று பருத்தித்துறை துறைமுகம் கலகலப்பாகக் காணப்பட்டது. குமாரி, றுகுணு ஆகிய இரு கப்பல்கள் நேற்று அங்கு வந்து சேர்ந்ததை அடுத்து பொருள்களை இறக்கும் வேலைகள் ஆரம்பமாகின.

துறைமுக தொழிலாளர்கள் இரு கப்பல்களில் இருந்தும் ஒரே சமயத்தில் பொருள்களை இறக்கும் பணியில் சுறுசுறுப்புடன் ஈடுபட்டிருந்தனர்.

யாழ். இட்டப் பணிப்பாளர் திரு. எஸ். பத்மநாதன் கப்பலில் வந்த பொருள்களை பொறுப்பேற்றதை அடுத்து இரு கப்பல்களில் இருந்தும் பொருள்கள் இறக்கும் வேலைகள் ஆரம்பமாகின.

(ஓ-3-173)

## குமாரியில் அரிசி, சீனி றுகுணுவில் உரவகை

வடமராட்சி, செப். 6

பருத்தித்துறைக்கு வந்துள்ள குமாரி கப்பலில் இரண்டாயிரம் மெற்றிக் தொன் அரிசி, ஆயிரம் மெற்றிக் தொன் சீனி உட்பட பருப்பு, பால்மா வகைகள் போன்றவை எடுத்து வரப்பட்டுள்ளன.

அத்துடன் தனியாருக்கும், வங்கிகளுக்கும் உரிய பொருள்களும் அதில் வந்துள்ளன.

றுகுணு கப்பலில் 861 மெற்றிக் தொன் உரம், கிருமிநாசினிகள் மற்றும் 100 பரல் தார் உட்பட வேறு பொருள்களும் எடுத்து வரப்பட்டுள்ளன.

(ஓ-3-173)

### தபால் வரவில்லை

வடமராட்சி, செப். 6

நேற்று பருத்தித்துறைத் துறைமுகம் வந்தடைந்த குமாரி கப்பலில் தபால் பொதிகள் எதுவும் எடுத்து வரப்படவில்லை.

நேற்று வந்த 'றுகுணு' கப்பலிலும் தபால் பொதிகள் ஏதும் எடுத்து வரப்படவில்லை என்று துறைமுக வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-173)

## தொண்டாவுடன் யாழ்.வர சபாநாயகர் விருப்பம்

### இடைக்கால கவுன்ஸில் அமைக்கும் யோசனை குறித்தும் அவர் மீண்டும் வற்புறுத்து

கொழும்பு, செப். 6

இலங்கையில் சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வது உதவுமானால், அமைச்சர் தொண்டமானுடன் சேர்ந்து யாழ்ப்பாணம் செல்ல தாமும் தயாராக இருப்பதாக சபாநாயகர் எம். எச். முஹம்மது தெரிவித்தார்.

நாடாளுமன்ற அலுவலகத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் வைத்து இந்த அறிவிப்பை அவர் விடுத்தார்.

அமைச்சர் தொண்டமானிடம் பாரிஸில் உள்ள விடுதலைப் புலிகள் பிரதிநிதி லோறன்ஸ் திலகர் கையளித்ததாகக் கூறப்படும் யோசனைகள் பற்றி தமக்கு எதுவும் தெரியாதென்றும் ... நாயகர், வடக்கு - கிழக்குப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வல்வெட்டித்துறை கடலில் படையினர் பீரங்கி வேட்டு

வடமராட்சி, செப். 6

வல்வெட்டித்துறை கடற்பரப்பில் நேற்றுக்காலை ஸ்ரீலங்கா கடற்படையினர் மீனவர்களை நோக்கி பீரங்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

நேற்றுக்காலை 5-45 மணி தொடக்கம் 6-15 மணிவரையிலான சுமார் அரை மணி நேரம் இத்தாக்குதல் விட்டு விட்டு நடத்தப்பட்டது.

காங்கேசன்துறைப் பகுதியிலிருந்து வந்த ஸ்ரீலங்கா கடற்படையினரின் இரு விசைப் படகுகள் மிக தூரத்தில் கிழக்கும் மேற்குமாக மாறி ஓடிக் கொண்டு, வேட்டுக்களைத் தீர்த்தன.

இத்தாக்குதல் சம்பவத்தின் போது கரையோரக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் தமது தொழில்களைக் கைவிட்டு திரும்பியிருந்தனர்.

(இ-173)

ஆனையிறவுப் பகுதியில்

## பலியான லெப்டினன்ட் முகாம் பொறுப்பாளர்

கொழும்பு, செப். 6

ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் கடந்த முதலாம் திகதி விடுதலைப் புலிகளின் இணைப்பர் தாக்குதலுக்குப் பலியான இராணுவ லெப்டினன்டின் பெயர் எஸ். ஆர். விக்சன் என்று தெரிவிக்கப்பட்டது.

விஜயபாகு காலாட்படை ரெஜிமெண்டைச் சேர்ந்த இவர் தாக்குதல் நடந்த சமயம் ஆனையிறவு முகாமின் வடபகுதியில் உள்ள சிறிய இராணுவ நிலை ஒன்றுக்குப் பொறுப்பாக இருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-எ)

சிரேஷ்ட துப்பறிவாளர்களுடன்

## இந்திய புலனாய்வுக் குழு கொழும்புக்கு விரைவு

கொழும்பு, செப். 6

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை பற்றி மேலும் விசாரணை நடத்த விசேட புலனாய்வு குழுவைச் சேர்ந்த சிரேஷ்ட துப்பறிவாளர் குழு ஒன்று இந்தியாவில் இருந்து கொழும்பு வந்து உள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சில நடவடிக்கைகள் மற்றி அறிந்து கொள்வதே இந்த குழுவினரின் நோக்கம் என்று இலங்கை வானொலி தெரிவித்தது.

மட்டக்குளியில் அண்மையில் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

கடற்படைச் சூட்டுக்குப் பலியான

## தமிழக மீனவரின் சடலம் இலங்கையில் தகனம்

ஸ்ரீலங்கா கடற்படையினரின் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த தமிழக மீனவரின் சடலத்தை இலங்கையிலேயே தகனம் செய்வதற்கு அவரது உறவினர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறைக் கடற் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இந்திய மீன்பிடிப் படகு ஒன்றின் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் தாக்குதல் நடத்தியதில் அந்தப் படகு மூழ்கடிக்கப்பட்டதும் —

இந்தச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்ததும், மற்றும் மூவர் காயமடைந்ததும் தெரிந்தவையே.

(ஓ-எ)

## துறைமுகப் பகுதிக்குள் வெளியார் செல்லதடை

பருத்தித்துறை துறைமுகத்துக்குள் கப்பலில் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ள பயணிகள் மற்றும் இறங்குதுறையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ஆகியோரைத் தவிர வேறு எவரும் உட்செல்லக் கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்புப் பலகை பருத்தித்துறை துறைமுக வாசலின் பிரதான முகப்புப் பகுதியில் போடப்பட்டுள்ளது.

(ஓ 173)

## 'தமிழரின் ஒரே பிரதிநிதி விடுதலைப் புலிகளே!'

### தொண்டாவின் கூற்றுக்கு கண்டனம்

கொழும்பு, செப். 6

லண்டனுக்கு விஜயம் செய்து இருந்த போது அமைச்சர் தொண்டமான் தமிழ் மக்களின் ஒரே பிரதிநிதி விடுதலைப் புலிகள் இயக்கம்தான் என்று கூறியது பற்றி மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்தன நாடாளுமன்றத்தில் அண்மையில் பிரஸ்தாபித்தார்.

அரசின் அமைச்சர் ஆ. தொண்டமான் இருப்பதால் அவர் தெரிவித்த இந்தக் கருத்து அரசின் கருத்தாக இருக்

(4-ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

**வியாழமாற்றம் நன்மையா**

12 - 10 - 1993இல் நிகழும் வியாழ மாற்றம் நன்மை பயக்குமா? உலக — இலங்கை பலன்கள் உட்பட 12 இராசிகளுக்குமான பலாபலன்கள். வெளியீடு: திருக்கணித நிலையம்; 10/- மட்டுமே. கிடைக்கும் இடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(27180)

## விடைத்தாள்கள் திருத்தம்

கொழும்பு செப். 6
கடந்த மாதம் நடந்த ஐந்தாம் வருட புலமைப் பரீட்சையின் விடைத்தாள்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் தற்போது திருத்தப்பட்டு வருகின்றன. 3 லட்சத்து 27 ஆயிரம் மாணவர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றினார்கள். (ஓ-எ)

## A/L DAY CLASSES

ஆரம்பம்:-
07—09—1993 (8 மணி)
செவ்., வியா., சனி, ஞாயிறு

பொருளியல் — மகேந்திரன்
கணக்கியல் — SAM
வர்த்தகம் — பகீன்
அளவையியல் — சோதி
அரசியல் — கியூபேட்
புவியியல் — சண்
தமிழ் — குழந்தை
இந்து நாகரிகம் } அருள்-
இந்துசமயம் } நங்கை

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(8/6045)

**University of Jaffna**

## TENDER NOTICE

Tenders are invited from contractors registered for civil Engineering works with University of Jaffna or ICTAD for:

a) Addition / Improvements to cycle sheds at administration block and Faculty of Arts.

b) Addition / Improvements to parking facilities at Faculty of Science.

Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna from 7-9-93 — 10-9-93 on producing receipt from Bursar University of Jaffna for the payment of the following tender fees for each tender,

a) refundable — Rs.2000/-
b) non-refundable Rs. 200/-

Tenders should be sent to reach Registrar, University of Jaffna not later than 21-9-93 at 10-00 a.m.

Tender forms can be inspected free of charge at Planning Branch, University of Jaffna during office hours.

Tender board, University of Jaffna reserves the right to reject any tender.

— REGISTRAR,
University of Jaffna,
P. O. Box 57,
Thirunelvely,
Jaffna.
(C-5870)

---

உடுவில் மகளிர் கல்லூரி

## பட்டப்படிப்புகள் பிரிவு

**G.A.Q., B.A. (Part I)**

விரிவுரைகள்

**ஆரம்பம்: 08 - 09 - 1993**
புதன் 3 மணி

குறிப்பு:
புதிய அனுமதிகளும் வழங்கப்படுகிறது.
(சி-5878)

---

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம்
நடத்தும்
அமரர்
ஆலாலசுந்தரம் ஞாபகார்த்த
மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட

## கிரிக்கெட் சுற்றுப் போட்டி - 1993

விண்ணப்பப் பத்திரங்கள் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்திலும், கழக உப பொதுச் செயலாளரிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

போட்டிக் கட்டணம்: 300/-
விண்ணப்ப முடிவு திகதி: 10-09 1993
போட்டி ஒழுங்கு நிரைப்படுத்தல்:
10-09-1993 பி. ப. 4-30 மணி
இடம்: அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம்
நிபந்தனைகள் வழமையானவை.

மேலதிக விவரங்களுக்கு.-
சு. குருபரன்,
உப பொதுச்செயலாளர்,
அ. ம. வி. கழகம்.

18/2, A. V. வீதி,
அரியாலை
யாழ்ப்பாணம்.
04-09-1993.
(இ-5883)

---

காரைநகர்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
374, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

## முக்கிய அறிவித்தல்

**கிளைக்குழுத் தேர்தல் - 1993**
**கிளை இல. — 12 வாரிவளவு**

மேற்படி கிளைக்குழுத் தேர்தல் தொடர்பாக 04 - 09 - 1993 திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது தொடர்பான ஆட்சேபனைகள் ஏதேனும் இருப்பின் அன்றைய தினம் முற்பகல் 10-00 மணி முதல் 12 மணி வரை என்பதை, முற்பகல் 10-00 மணி முதல் 11 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

திருமதி யோ. செல்வரத்தினம்,
தேர்தல் உத்தியோகத்தர்.

கூட்டுறவு அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
01 - 09 - 1993
(இ-5884)

---

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கணபதி தியாகேசு**
(காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபன மின்பகுதி உயர் உத்தியோகஸ்தர்)

மலர்வு: 07 — 01 — 1931
உதிர்வு: 31 — 08 — 1988

அன்பாகவும், பண்பாகவும், செல்லமாகவும் எங்களை காத்திட்ட எங்கள் தெய்வமே! எங்களை விட்டுப் பிரிந்து இன்றுடன் ஐந்தாண்டுகள் பூர்த்தியானாலும் உங்கள் அன்பு முகத்தை எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுடன் நாங்கள் தவித்துக் கொண்டிருப்போம்: தங்களின் ஆத்மா சாந்தியடைய முருகனை வேண்டுகின்றோம்:

மனைவி, பிள்ளைகள்.

ஆதியாமலை,
இளமையாணன், உடுப்பிட்டி.
(27200)

---

மயிலங்கூடல்
அருள்மிகு ஞான வைரவர் ஆலய
(ஆவணி ரோகினி)

## முதற் கும்பாபிஷேக தினவிழா

இளவாலை வடக்கு கிராம சேவகர் பிரிவிலுள்ள மயிலங்கூடல் அருள்மிகு ஞானவைரவர் ஆலய முதற்கும்பாபிஷேக தின விழா
உரும்பராய்
(சந்திக்குக் கிழக்காகவுள்ள)
அருள்மிகு ஞான வைரவர்
ஆலயத்தில் அவ்வாலய நிர்வாகிகளின் அனுசரணையுடன் எதிர்வரும் 1993 — 09 — 08 புதன்கிழமை காலை 9மணி முதலாக அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெறும். அன்பர்கள் அடியார்கள் அனைவரும் பங்கு கொண்டு அருள்மிகு ஞானவைரவப் பெருமானின் திருவருள் பெற்றுய்யுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

பரிபாலன சபையினர்,
அருள்மிகு ஞான வைரவர் ஆலயம்.

மயிலங்கூடல்,
இளவாலை.
(27201)

---

## சமையலாளர் உடன் தேவை

சமையற்கலையில் அனுபவமுள்ள 45 வயதிற்கு மேற்பட்ட ஆண் சமையலாளர் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். வதிவிட வசதி செய்து தரப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

விளம்பர இல: 558,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.
(இ-5885)

---

இருபாலை
**கற்பக பிள்ளையார் கோயில்**

## நவகுண்ட பக்ஷ நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகத்தை

இன்று (06 - 09 - 1993) நடத்தி வைக்கும்
பிரதம குரு
**சிவஸ்ரீ ச. மகாலிங்கசிவக் குருக்கள்**
அவர்களுக்கு
(நாயன்மார்கட்டு அரசடிப்பிள்ளையார்)

அகில இலங்கை சைவகுருமார் அர்ச்சகர் சபையும்; இருபாலை கற்பகப் பிள்ளையார் தேவஸ்தான மெய்யடியார்களும் இணைந்து 06 - 09 - 1993 இல்
"ஆகமகிரியாஜோதி"
எனும் கௌரவ விருது வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவிருக்கும் விழா சிறப்புடன் நிகழ வேண்டுமென கற்பகப் பெருமானை பிரார்த்திக்கிறேன்.

"சாதகஞானபானு"
சிவஸ்ரீ ந. கேதீஸ்வரக் குருக்கள்,
கதிரேசன் தேவஸ்தானம்,
அநுராதபுரம்.

இருபாலை.
05 - 09 - 1993
(27199)

---

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில்: 19 — 03 — 1921



அம்பாள் அடியில்: 07 — 08 — 1993

நயினாதீவு
**திருமதி இலட்சுமி கார்த்திகேசு**

07 - 08 - 1993 சனியன்று இறைபதமடைந்த எம் குடும்ப விளக்கு திருமதி இலட்சுமி கார்த்திகேசு அவர்களின் இறுதிக் கிரியைகளின்போது பல வழிகளிலும் எமக்கு உதவிபுரிந்தும், எம்துயரத்தில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியறிதலை சமர்ப்பித்து தெரிவிப்பதுடன், அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (06-09-93) எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அதிலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

இங்ஙனம்:
குடும்பத்தினர்.

15/8 முருகேசர் வீதி,
நல்லூர்.
(இ-5886)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நோக்கத்தில் மாறுதல் இல்லை

வடபகுதிக் கடற்பிரதேசத்தை — மன்னார் முதல் திருகோணமலை வரையான கடற்பரப்பை — தடை செய்யப்பட்ட பிரதேசமாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. அதாவது வடக்குக் கடற்பிரதேசத்தில் வள்ளங்கள், படகுகள் எதுவும் செல்ல முடியாது தடை விதிக்கப்பட்டுள்ளது. கடற்படைத் தளபதியின் அனுமதி பெற்றே படகுகள் வள்ளங்கள் இக்கடற்பரப்பில் செல்லலாம்!

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்படை — கடற்புலிகள்—கடற் கரும்புலிகள் வட பிரதேசக்கடலில் வைத்து அரச கடற்படைக்குச் சொந்தமான படகுகளைத் தகர்த்துப் பல படையினரைக் கொன்றதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அரசு விதித்த தடை உத்தரவு இது.

இந்தத் தடை உத்தரவின் மூலம் கடற்புலிகளின் தாக்குதலைத் தடுத்து விடலாம் என்று அரசாங்கம் எண்ணுமானால் அதனைவிட தப்புக் கணக்கு வேறு எதுவும் இருக்க முடியாது. இந்தப் பரந்த கடற்பரப்பில் ஸ்ரீலங்கா கடற்படையினர் நிக்கமற தமது படகுகளை நிறுத்தி வைத்தாலுங் கூட, கடற் புலிகளின் அதிரடித் தாக்குதல்களைத் தடுக்க முடியுமா என்பது சந்தேகத்துக்கு உரியதே.

அரசாங்கத்தின் தடையை அவர்கள் பொருட்படுத்துபவர்கள் அல்லர். அதற்கு அஞ்சித் தமது தாக்குதல்களை நிறுத்தி விடக் கூடியவர்களுமல்லர். அரசின் தடை உத்தரவுக்குச் சவால் விடுவது போல, மிகக் குறுகிய காலத்தில் மீண்டும் தமது கரும்புலித் தாக்குதல்களை நடத்தினால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

அரசாங்கத்திற்கும், பாதிக்கப்பட்ட அரச கடற்படைக்ளுக்கும் இது தெரியாமல் இருக்கக் காரணமில்லை. தெற்கின் மூத்த பத்திரிகையாளரான லூசியன் ராஜகருணநாயக்கா உய்த்துணரக் கூடிய ஒன்றை, கடற்படை உயர் அதிகாரிகளாலும், பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளாலும் பகுத்துணர முடியாமல் போயிற்றா?

அப்படியல்ல. தாம் போடும் எந்த உத்தரவும் வடக்கில் செல்லுபடியாவதுமில்லை, தங்களால் அதனை அமுல் செய்யவும் முடியாது என்பதும் அவர்களுக்குத் தெரிந்த விடயமே.

தாங்கள் விதிக்கும் எல்லாத் தடைகளையும் எதிர்கொண்டும், மாற்று உபாயங்களைக் கையாண்டும், புதிய வழிமுறைகளைக் கண்டுபிடித்தும் ஐம்பது விதமேனும் தோற்கடித்து விடும் திறமை தமிழ் மக்களுக்கு உண்டு என்பதை இந்த மூன்றேகால் வருடங்களில் அரசு புரிந்துகொண்டிருக்கும் என நம்பலாம்.

அரசு கடும் பொருளாதாரத் தடையை ஆரம்பத்தில் விதித்த போது, தமிழ்ப் பகுதிகளில் உள்ளூர் உற்பத்திகள் பெருகியது மட்டுமன்றி, பல மாற்றீடுகளும் அறிமுகமாகின. இந்த நிலையை வளரவிடக்கூடாது என்ற நயவஞ்சகத்துடன், இடையில் உத்தியோகப்பற்றற்ற முறையில் பல கொழும்பு உற்பத்திகளை வடக்கே கொண்டுவர அரசு அனுமதித்ததை மறந்து விடுவதற்கில்லை. கிளாலிக் கடலேரித் தடையை அரசால் முற்றாக அமுல்செய்ய முடிந்ததா? கடற்புலிகளே பயணிகளுக்குப் பாதுகாப்பு வழங்கி வாரத்தில் மூன்று நான்கு நாட்கள் படகுச் சேவை நடக்கிறது!

அவ்வாறிருக்க இந்தத் தடை உத்தரவின் நோக்கம் என்ன? வழமையானது தான். தமது தோல்விக்காக, இழப்புக்காகத் தமிழ் மக்களை வஞ்சம் தீர்ப்பதே. தடையை மீறி கடலில் வந்தார்கள் என்று கூறி தமிழ் மீனவர்களைக் கொல்வது. அதன் மூலம் ஏற்கனவே பாதிக்கப்பட்ட வடக்கின் மீன்பிடிக் கைத்தொழிலை மேலும் நாசமாக்குவது.

வடக்கு - கிழக்கு கடற்பிரதேச நடமாட்டத்தை அரசு கடந்த பத்து வருடங்களுக்கு முன்னரே கட்டுப்படுத்தவும், தடை செய்யவும் தொடங்கி விட்டது. இப்போது அதனை பரந்த அளவில் அமுல் செய்வதாக அறிவித்திருப்பது, தான் நடத்தும் கடற்படுகொலைகளையும், கடற்றொழில் நாசத்தையும் நியாயப்படுத்துவதற்கே.

### கொழும்பில் தமிழர் வேட்டை தொடர்கிறது

# கொட்டாஞ்சேனையில் மட்டும் 3 நாட்களில் 120 பேர் கைது

யாழ்ப்பாணம், செப். 6

கொழும்பில் பல பகுதிகளில் பொலிஸாரின் தேடுதல் வேட்டை தொடர்கிறது.

இந்த வார ஆரம்பத்தில் கொட்டாஞ்சேனையில் தேடுதல் நடத்திய பொலிஸார் 3 நாட்களில் 120 பேரை கைது செய்தனர். இவர்களில் அறுவர் பெண்களாவர்.

கைது செய்யப்பட்டவர்களில் 20 பேரை பொலிஸார் தொடர்ந்தும் தடுத்து வைத்துள்ளனர்.

இதேவேளை கொழும்பிலும் அதன் சுற்றுப்புறத்திலும் இதுவரை 500 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக மற்றொரு செய்தி தெரிவிக்கிறது.

(ஒ-8)

### ஆலயங்களில்

இருபாலை அருள்மிகு ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் கோயிலில் இன்று திங்கள் காலை 10 மணிக்கு நவ குண்ட பக்ஷநவோத்தர சகஸ்ர சங்காபிஷேகம் இடம்பெறும்.

(த)

o o o

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன பீடாரோகண 27 ஆவது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு குருமூர்த்த ஆலயத்தில் ஸ்நபன அபிஷேகமும், விசேட பூசை ஆராதனைகளும் நடைபெற்றுத் தொடர்ந்து மகேஸ்வர பூசை இடம்பெறும்.

(த)

### வடக்கு - கிழக்கு

## இணைப்பை கிழக்குப் பகுதி மக்கள் விரும்பவில்லையாம்

### ஜனாதிபதி சொல்கிறார்

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைந்திருக்க வேண்டும் என்று கிழக்கில் வாழும் மக்கள் விருப்பம் தெரிவிக்கவில்லை.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க.

நேற்று முன்தினம் அம்பாந்தோட்டையில் நடைபெற்ற அரசாங்க திணைக்களங்கள் மற்றும் மாகாணசபைகளின் அதிகாரிகள் கலந்து கொண்ட மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது;

நாடு பிளவுபடுவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. நாட்டில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் எந்த ஒரு நடவடிக்கையையும் அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்காது.

வடக்கு - கிழக்கில் தற்போது நடைபெறும் சண்டை இனப்பிரச்சனையுடன் தொடர்புடையது அல்ல — என்றார். (த-க)

## குரக்கன் கொள்வனவுக்கு 'பொருண்மியம்' ஏற்பாடு

விவசாயிகளின் நன்மை கருதி யாழ். மாவட்டத்தின் சகல பகுதிகளிலிருந்தும் திட்டிய குரக்கனை, கிலோ 26 ரூபா வீதம் கொள்வனவு செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

இதனை விற்பனை செய்ய விரும்பும் விவசாயிகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் மாவட்ட, கோட்ட, வட்ட தொடர்பாளர் அலுவலகங்கள், உதயம் பல்பொருள் அங்காடி, மதுரம் பாண் தயாரிப்பகம், காமதேனு விவசாயக் கால்நடைப் பண்ணை ஆகியவற்றுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (த)

## இனப்பிரச்சினையை தீர்க்க அரசு ஆர்வம்காட்டவில்லை

### தினேஷ் குணவர்த்தனா சொல்கிறார்

கொழும்பு, செப். 6

பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலிகொண்டு, பலகோடி ரூபாவை வீண் செலவாக்கிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண ஐ. தே. க. அரசு ஆர்வம் காட்டவில்லை என்பது தெரிவுக்குழு படுதோல்வி கண்டிருப்பதில் இருந்து தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தனா இவ்வாறு குற்றஞ் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் இறுதி அறிக்கையை தயாரிப்பதற்காக அழைக்கப்பட்டிருந்த குழுக்கூட்டம் நோக்கம் நிறைவேறாமல் கலையவேண்டி ஏற்பட்டுள்ளது. 46 பிரதிநிதிகளைக் கொண்ட தெரிவுக்குழுவின் அந்தக் கடைசிக் கூட்டத்தில் 9 பிரதிநிதிகளே சமூகமளித்திருந்தனர். அனைத்து தமிழ் கட்சிகளும் தெரிவுக்குழுவை பகிஷ்கரித்துள்ளன. தெரிவுக் குழுவில் தற்போது எஞ்சியுள்ளவை சிங்கள கட்சிகள் மட்டுமே. தமிழர்களின் பிரச்சினைக்குத்தீர்வுகாணும் நோக்கம் சிங்கள அரசியல்வாதிகளிடம் இல்லாதிருப்பதால் ஐ. நா. நிறுவனத்தின் ஆதரவு பெறப்பட வேண்டும் என்று சில தமிழ்த் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.— இவ்வாறு திரு. தினேஷ் குணவர்த்தனா பி. பி. ஸி. யின் சிங்கள சேவைக்குத் தெரிவித்தார்.

இதே வேளை —

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சரேஸ் ப்ரேமச்சந்திரன் பி. பி. ஸிக்கு கருத்து தெரிவிக்கையில்,

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண சாதகமான ஆலோசனைகளைக் கூடச் சமர்ப்பிக்கும் ஆத்ம சக்தியுள்ள நாட்டுத் தலைவர் ஒருவர் இல்லாததால் இப் பிரச்சினையில் சர்வதேசம் தலையிட்டுத் தீர்வு காணவேண்டும். பிரச்சினையைத் தீர்த்து வைக்கக் கூடிய தேசத் தலைவர் இல்லாத நிலையில் நாம் விரும்பியோ விரும்பாமலோ எங்களுக்கு வெளியார் தலையீடு அவசியமாகியுள்ளது அது ஐக்கிய நாடுகள் சபையாகவோ, பொதுநலவாய நிறுவனமாகவோ இலவேளைகளில் மீண்டும் இந்தியாவாகவோ இருக்கலாம் — என்றார்.

(த-5-6)

### இளம்பிள்ளை வாத தடுப்பூசி

யாழ்ப்பாணம், செப். 6

வடபிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினால், இடம் பெயர்ந்தோர் முகாம்களில் உள்ள ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு மீண்டும் இளம்பிள்ளை வாத நோய்த் தடுப்பூசி போடப்பட உள்ளது.

முகாம்களில் நெருக்கமாக ஆட்கள் இருப்பதால் இந் நோய் பரவக்கூடிய ஆபத்து இருப்பதைக் கருத்திற் கொண்டு இடம் பெயர்ந்தோர் முகாம்களில் ஒவ்வொரு வருடமும் இளம்பிள்ளை வாத நோய்த்தடுப்பூசி போடப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த-162)

## சுகாதார சேவைப் பகுதிக்கு நியாய விலையில் ரயர், ரியூப்

வடபிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணியாளர்களுக்கு நியாய விலையில் சைக்கிள் ரயர், ரியூப்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

முதற் கட்டமாக, இங்கு எடுத்து வரப்பட்ட 700ரயர் ரியூப்கள் 1 ரயர் ரியூப் ரூபா 190 ஆக விநியோகிக்கப்படுகின்றது.

சுகாதார திணைக்கள பணியாளர்களுக்கு வழங்கவென 2 ஆயிரம் ரயர் ரியூப்களை இங்கு தருவிக்க ஏற்பாடாகி இருந்தது.

அதில் முதற்கட்டமாக வந்து சேர்ந்த ரயர் ரியூப்களே தற்போது விநியோகிக்கப்படுகின்றன. (த-17)

## கண்மூடித்தனமான குண்டுவீச்சை நிறுத்துக

### செயலக ஊழியர் ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம் செப். 6

யாழ் மாவட்டத்தில் ஸ்ரீலங்கா படையினர் மேற்கொள்ளும் கண்மூடித்தனமான குண்டுவீச்சையும், ஷெல்தாக்குதலையும் நிறுத்துமாறு யாழ் செயலக ஊழியர்கள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடம் கோரியுள்ளனர்.

சித்தன்கேணியிலும், தெல்லிப்பழையிலும் கடந்த 27, 28ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட விமான, ஷெல்தாக்குதலில் கொல்லப்பட்ட செயலக ஊழியர்களான தியாகமூர்த்தி, நவரத்தினம் ஆகியோரின் இரங்கல் கூட்டம் அண்மையில் செயலகத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் வைத்து செயலக ஊழியர்களால் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரிடம் ஜனாதிபதிக்கான மகஜர் கையளிக்கப்பட்டது.

### விமானத் தாக்குதல்களை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் தாக்கப்பட்ட கடற்படைப் படகு கடலில் மூழ்குவதற்கு முன் எடுத்துச் சென்றுவிட்டார்கள் என்றும் இராணுவ அதிகாரிகள் கூறினர்.

**500 மீட்டருக்கும் அதிக வீச்சு எல்லை**

கைப்பற்றப்பட்ட 20 மி.மீ. பீரங்கியின் வீச்சு எல்லை (Range) 500 மீற்றருக்கும் அதிகமானது என்றும் இராணுவ அதிகாரிகள் ஒப்புக் கொண்டனர்.

"டோறா" படகு மூழ்குவதற்கு முன்னர் அதில் இருந்து ஆயுதங்களையும், வெடிப் பொருள்களையும் மீட்டு எடுத்து தமது படகுகளில் ஏற்றுவதற்கு விடுதலைப் புலிகள் கணிசமான நேரத்தை செலவிட்டனர் என்றும் இராணுவ அதிகாரிகள் கூறினார்கள்.

**முன்னர் கைப்பற்றியதும் சக்தி வாய்ந்தது**

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மண்டைதீவுக்கு அருகில் நங்கூரமிட்டு இருந்த 80 அடி நீள ரோந்துப் படகை விடுதலைப் புலிகள் கைப்பற்றியபோதும் அதில் இருந்த துப்பாக்கி ஒன்றை விடுதலைப் புலிகள் எடுத்தனர் என்றும்—

அதுவும் விமானங்களைத் தாக்கும் சக்தி வாய்ந்தது என்றும் த ஐலண்ட் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் உள்ள தமது முகாம்கள், தொழிற்சாலைகள் மற்றும் இராணுவ முக்கிய நிலைகள் மீதான விமான தாக்குதல்களை தடுத்து நிறுத்தக்கூடிய விமான எதிர்ப்புத் திறமையைக் கட்டி எழுப்பும் முயற்சியில் விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் ஈடுபட்டிருப்பதாக இராணுவ அதிகாரிகள் நம்புகின்றனர்.

கைப்பற்றப்பட்ட 20 மி.மீ. பீரங்கியைப்பாவிப்பது பேரழிவுகளைக் கொண்டு வரும் என்று இராணுவ அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் ஒப்புக் கொண்டிருக்கின்றனர்.

கடற்படை இலக்குகளுக்கு எதிராக கைப்பற்றப்பட்ட பீரங்கியை கடற் புலிகள் பயன்படுத்தக் கூடிய சாத்தியக் கூறுகளையும் இராணுவ அதிகாரிகள் நிராகரிக்கவில்லை.

20 மி.மீ. பீரங்கி பயன்படுத்துவதற்கு எதிராக தொடர்ச்சியான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டியுள்ளது என்றும் இராணுவ அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளார்கள். (ஒ-எ)

## தியாகி திலீபனின் 6-ம் ஆண்டு நினைவு தின ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், செப். 6

தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு நாட்கள் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் 26 ஆம் திகதிவரை அனுஷ்டிக்கப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

யாழ். மாவட்டத்தில் வட்டவை ரீதியாக பொதுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு அடையாள உண்ணாவிரதங்கள் இடம்பெற உள்ளன.

யாழ். மாவட்டத்தில் உள்ள வட்டவைகளில் வட்டத்துக்கு ஒன்று என்ற ரீதியில் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படும். நினைவு நாட்களில் [illegible] 7 மணிமுதல் [illegible] வரை நடைபெறும் உண்ணாவிரதத்தில் பொது மக்கள் பொதுஸ்தாபனங்கள், சமூகங்கள் ஆகியவற்றைச் சேர்ந்தோர் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் சுழற்சி முறையில் பங்குபற்றுவர்.

பாடசாலை மட்டத்தில் நினைவு நாட்களான பதினொரு தினங்களும் தியாகி திலீபனின் உருவப்படத்திற்கு மலரஞ்சலிகள் செய்யப்படும். அத்துடன் நினைவுக் கருத்தரங்குகளும் நடத்தப்படும்.

இவை தவிர நினைவு நாட்களில் குடாநாடெங்கும் பொதுமக்களுக்கு நன்மை தரக்கூடிய சிரமதானங்கள் செய்யப்படும்.

[illegible] திலீபன் [illegible] இறுதி நாளான எதிர்வரும் 26ஆம் திகதி காலை 8 மணிமுதல் மாலை 5மணி வரை கோட்டமட்டத்தில் அமைக்கப்படும் விசேட பந்தல்களில் உண்ணாவிரதமும் தொடர்ந்து பொதுக் கூட்டங்களும் இடம்பெறும்.

மேலும் நினைவு நாட்களில் வீடுகள், பொது நிறுவனங்கள் முன்பாகவும் மற்றும் முக்கிய இடங்களிலும் திலீபனின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு மரியாதை செலுத்தப்படும்.

(த—5)

வனம் வளர்த்து மனம் மகிழ்வோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் - பலஸ்தீன இயக்கம் ஒருவார காலத்தில் ஒப்பந்தம்

இஸ்ரேலும், பலஸ்தீனியர்களும் இன்னும் ஒரு வாரத்தில் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வாஷிங்டனில் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு இம்மாதம் 13 ஆம் திகதி பொருத்தமான தினம் என்று அமெரிக்க வெளிவிவகாரத் திணைக்களம் யோசனை தெரிவித்துள்ளது.

இதேவேளை—

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் ரியூனிஸிலிருந்து நேற்று அல்லது இன்று சிரியா சென்று அரபு நாடுகளின் தலைவர்கள் ஏனைய பலஸ்தீன குழுவினர் ஆகியோரின் ஆதரவைத் திரட்ட உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனிடையில்—

டெல்அவிவில் ஆயிரக்கணக்கான இஸ்ரேலியர்கள் தமக்குச் சமாதானம் வேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டம் நடத்தி உள்ளனர்.

(இ-த)

## புலிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களும் நேரே யாழ்ப்பாணம் வந்து எம்மோடு பேசினால் எமது உண்மையான தன்மையை புரிந்து கொள்வார்கள்'' என்றார்.

பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமஷ்டி முறையிலான தீர்வை பரிசீலிக்கத் தயார் என்று தலைவர் பிரபாகரன் அறிவித்திருந்த போதிலும் அது குறித்து அரசிடம் சாதகமான நிலை இருப்பதாக இல்லை. இது ஏமாற்றத்தைத் தருவதாகும்.

தெற்கில் உள்ள அரசியல் தலைவர்கள் சமஷ்டியையும், வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தையும் ஏற்கத் தயாராக இல்லை.

நோபல் பரிசு பெற்ற அறிஞர்கள் சமர்ப்பித்த யோசனையில் கூட, ஒருவகை சமஷ்டி அமைப்பில் உள்ள முறையையே தெரிவித்திருந்தார்கள். அந்த யோசனை குறித்து நாம் பரிசீலனை செய்வதற்கு முன்னரே அரசாங்கம் அதனை அடியோடு நிராகரித்துவிட்டது.

தேர்தல்கள் பற்றிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்ததாவது:-

வடக்கு-கிழக்கில் சமாதானமும் இயல்பு நிலையும் உருவாக்கப்படுமானால், அந்தச் சூழ்நிலையில் தேர்தல் ஒன்று நடத்தப்படுமானால், சகல அரசியல் குழுக்களும் கட்சிகளும் நியாயமான தேர்தலை எதிர்கொள்ள அனுமதிப்பதற்கு நாம் தயாராக இருப்போம். ஜனநாயகப் பாங்கில் அமைந்த தேர்தலில் அவர்கள் அக்கறையுடன் போட்டியிடவும் சுதந்திரமாகப் பிரசாரம் செய்யவும் முடியும்—என்றார்.

# பொது ஸ்தாபனங்களுடன் நாளை மறுதினம் சந்திப்பு

வலிகாமம் கோட்டத்தில் உள்ள பொது ஸ்தாபனங்களுடனான சந்திப்பு ஒன்று எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

பின்வரும் ஸ்தாபனங்களையும் உறுப்பினர்களையும் அன்றைய தினம் அங்கு சமுகமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அமைப்புகள், ப. நோ. கூ. சங்க இயக்குநர்கள், ஊழியர்கள், தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர்கள், ஊழியர்கள், கிராமிய உழைப்பாளர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், வகுப்புத் தொழிலாளர் சங்கம், நகைத்தொழிலாளர் சங்கம், தமிழ் பேசும் போக்குவரத்து ஊழியர் சங்கம், வடபிராந்திய கருங்குத் தொழிலாளர் சங்கம், வடமாநில கருட்டுத் தொழிலாளர் சங்கம், ஆங்கில மருந்து விற்பனையாளர் சங்கம் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் உறுப்பினர்கள்.

(இ-5)

## 3 பாடசாலைகளுக்கும்

# தொழில் நுட்ப கல்லூரிக்கும் ஜெனரேற்றர்கள் வந்தன

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு கூடுதல் பயிற்சிகளை வழங்க வசதியாக 10 கே. வி. ஜெனரேற்றர் ஒன்றும் பாடசாலைகளுக்கு மூன்று ஜெனரேற்றர்களும் கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் உயர்மட்ட அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து இந்த ஜெனரேற்றர்கள் இங்கு எடுத்து வர அனுமதி அளிக்கப்பட்டது.

யாழ். இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் ஆகியவற்றுக்கும் தலா ஒவ்வொரு ஜெனரேற்றர்கள் கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளன.

(ஒ-8)

# மந்திரி மல்லிமாராச்சியும் இங்கு வருவதற்கு ஆவல்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக யாழ்ப்பாணத்துக்குச் செல்லவும் தாம் தயாராக இருப்பதாக உணவு கூட்டுறவுத்துறை மற்றும் ஜனசக்தித்துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமராச்சி களுத்துறையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

யாழ்ப்பாண அரச அதிபர் கொழும்பில் தங்கியிருந்த போது அவரைச் சந்தித்து அவர் மூலமாக விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனுக்கு, யுத்தத்தை கைவிட்டு யாழ். குடாவில் சமாதானத்தை ஏற்படுத்துமாறு கோரும் தகவல் ஒன்றை அனுப்ப முயற்சித்தேன் என்றும் அவர் கூறினார். (ஒ)

# விளையாட்டு நிகழ்வுகள்

புன்னாலைக்கட்டுவன் கலைவாணி விளையாட்டுக் கழகம் உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் — 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் — நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3-30 மணி:-உரும்பராய் அண்ணா அணி எதிர் புத்தூர் சரஸ்வதி அணி.

★ 4-30 மணி கோப்பாய் கோல்ட் ஸ்ரார் அணி எதிர் பயிலங்காடு ஞானமுருகன் அணி (உ-10)

o o o

காரைநகர் தோப்புக்காடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3 30 மணி:- செல்வா அணி எதிர் அராலி சில்வர் ஸ்ரார் அணி.

★ 4 30 மணி:- கலைவாணி 'ஏ' அணி எதிர் கிறீன்பீல்ட் அணி.

o o o

யாழ். பல்கலைக் கழகக் கலந்துரையாடல்

யாழ் மாவட்ட வர்த்தக சங்கங்களின் உறுப்பினர்கள், வர்த்தக ஊழியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. (ஒ-3)

நடத்தும் மேசைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டிக்கு ஆண்—பெண் இருபாலரிடமும் இருந்து ஒற்றையர் இரட்டையர் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை யாழ். பல்கலைக் கழக விளையாட்டுப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பம் அனுப்புவதற்கான இறுதித் தினம் நாளையாகும்.

(உ)

## சிப்பாய் பலி

யாழ்ப்பாணம், செப். 6

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிபாய்ந்தகல் பகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன.

கொல்லப்பட்ட சிப்பாய் ஏழாவது கெமுனு படைப் பிரிவைச் சேர்ந்த திலகரத்தினா எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## இந்திய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முக்கிய பிரமுகர் எனக் கூறப்படும் நிர்ஸனிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களை அறிந்து கொள்வதற்காக இந்திய துப்பறிவாளர்கள் இலங்கை இரகசியப் பொலீஸ் அதிகாரிகளைச் சந்தித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்குளியில் குற்றத் தடுப்புப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட இவர் பின்னர் இரகசியப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

## தொண்டாவுடன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கான முதல் படியாக தமது இடைக்கால யோசனையை புதுப்பிப்பதாகவும் தெரிவித்தார்.

''கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தப் போவதாக அரசு அறிவித்ததைத் தொடர்ந்து இடைக்காலக் கவுன்ஸில் அமைக்கும் எனது யோசனையை நான் வற்புறுத்தாது விட்டேன்.

இப்போது உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டு விட்டது. அதனால் எனது யோசனையை மீண்டும் வற்புறுத்தவுள்ளேன்'' —என்றும் அவர் கூறினார்.

இடைக்கால கவுன்ஸில் யோசனையை தமிழ் மற்றும் முஸ்லிம் குழுக்கள் ஆர்வத்துடன் வரவேற்றன. சுதந்திரக் கட்சியும் அக்கறை காட்டியது. இந்த யோசனை பற்றி ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தெரிந்திருந்தது என்றார் அவர்.

கேள்வி: அதில் சேர விடுதலைப் புலிகள் விருப்பம் தெரிவித்தால் ...

சபாநாயகர்: அவர்கள் வரவேற்கப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் யுத்தத்தை நிறுத்த வேண்டும். விடுதலைப் புலிகள் சேர்வதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நிச்சயமாகக் கூறுவேன் இடைக்கால நிர்வாக யோசனையை அரசு பரிசீலனை செய்ய வேண்டும்

### ஐ. நா, தலையீடு தேவையற்றது

இனப்பிரச்சினையில் ஐ நா. தலையீட்டை அரசு நிராகரித்ததை ஏற்றுக் கொள்வதாக கூறிய சபாநாயகர் —

''ஐ. நா. இங்கு தலையிட அனுமதியாதீர்கள். கடவுளின் பேரால் இதனைக் கேட்டுக் கொள்கின்றேன். பொஸ்னியா மற்றும் சோமாலியாவில் உள்ள குழப்பத்தைப் பாருங்கள்'' —என்று தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகக் கவுன்ஸில் ஒன்றை அமைப்பதற்கு அரசமைப்பு இடம் தராவிட்டால், ஆளுநருக்கு ஆலோசனை கூற கவுன்ஸில் ஒன்றை [illegible] வார். (ஒ-எ)

## தமிழரின் ஒரே...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்றதா என்றும் தினேஷ் குணவர்த்தனா கேட்டார்.

இதற்கு இணை அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி பதிலளிக்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஏனைய தமிழ்க் கட்சிகளால் முடியாதுபோயிற்று. இந்த நிலையில் அரசியல் தீர்வு காணும் பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகளைக் கொண்டு வரவேண்டும் என்று கூறினார். (இ-எ)

# மரண அறிவித்தல்கள்

## அப்பாப்பிள்ளை சிவராமலிங்கம்

(ஓய்வுபெற்ற கட்டடத்திணைக்கள பிரதம இலிகிதர்)

கைதடி வடக்கைச் சேர்ந்த அ. சிவராமலிங்கம் நேற்று [05-09 93] காலமாகிவிட்டார்.

இவர் மனோன்மணியின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான அப்பாப்பிள்ளை — வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்ற மலாயன் பென்சனர் மளவராயர் சின்னத்தம்பி, திருமதி சின்னத்தம்பி ஆகியோரின் மருமகனும், தயாளினி (ஆசிரியை ஹற்றன்), தயாரூபன் (சவுதி), வதாளினி (கொழும்பு), அருட்செல்வன் (கனடா), தயாபரன், பிரபாகரன் (சம்பியா), சுதாகரன் (பல்கலைக்கழகக் கல்லூரி கவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தங்கராஜ் (டுபாய்), நாகவதனி ஹற்றன் நஷனல் வங்கி கொழும்பு ஆகியோரின் மாமனாரும் மிருதுஷாவின் அன்புப் பேரனுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்

அ. சுப்பிரமணியம்

(சகோதரன்)

''ஞானஸ்தான்''

கைதடி வடக்கு,

கைதடி.

(27204)

## இரத்தினம் பொன்னுத்துரை

(இளைப்பாறிய உபஅதிபர், சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம், இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலயம்)

இணுவிலைச் சேர்ந்த இரத்தினம் பொன்னுத்துரை நேற்று (05-09-1993) காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திலகம் பொன்னம்பலம் (மலேசியா) அவர்களின் அன்புச் சகோதரனும், சரோஜினி, சாருகாசினி (கனடா), அருள்முருகன், அருட்சோதி (லண்டன்), ஞானேஸ்வரி (மலேசியா), அருட்பிரகாசம் (எக்ஸ்றே தொழில் நுட்பவியலாளர் மந்திகை ஆதார வைத்தியசாலை), அருட்செல்வம், அருட்செல்வி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், செல்வநாயகம் (ஆசிரியர், கொக்குவில் இந்து), சண்முகசுந்தரம் (கனடா), இராஜராணி, பபிஅருட்சோதி(லண்டன்). சிவன் (மலேசியா) தேவகி (தொழில் நுட்பவியலாளர் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை), சிவநேசசுந்தரம் (இளைப்பாறிய சுகாதார மேற்பார்வையாளர் யாழ். மாநகர சபை) ஆகியோரின் அன்பு மாமனாரும்—

சாந்தா, சுகந்தன் (லண்டன்), சுதா (உடுவில் மகளிர் கல்லூரி), கனடாவில் வசிப்பவர்களான சிவகுமார், கணேஸ், லக்ஷ்மணி, சிவரூபி, றஜீதா (மலேசியா), சயேசன், வஜிரா, சஜனி, சர்மிலன், சிவசெந்தூரி, பிரியவருண் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று இவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

எஸ். செல்வநாயகம்

(மருமகன்)

இணுவில் தெற்கு,

இணுவில்.

(27205)

## சோமசுந்தரக்குருக்கள் கோவிந்தராஜா

(சங்கீத ஆசிரியர்)

வல்வெட்டித்துறை நெடியகாட்டைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற சங்கீத ஆசிரியர் கோவிந்தராஜா அவர்கள் நேற்று (05-09-93) காலமானார்.

இவர் பர்வதாம்பாளின் அன்புக் கணவரும், மகாராஜா (தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்), நந்தகோபாலக்குருக்கள் (நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவில் பிரதமகுரு), பராசக்தி, பொன்னம்மா (சங்கீத ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கதிரமலை (ஓய்வு பெற்ற அரச இலிகிதர்), காலஞ் சென்ற சத்தியமூர்த்தி (D.O.A. மகாவலி அபிவிருத்திச் சபை) அன்னலட்சுமி, நவரத்தினாம்பாள் ஆகியோரின் மைத்துனரும், பரமேஸ்வரி (லண்டன்), பரமேஸ்வரன் (கனடா), ஸ்ரீஸ்கந்தராஜா (நவஉதயம்), உதயகுமாரி, உதயகுமார் (சுவிஸ்), கேதீஸ்வரி, வள்ளிகாந்தன் ஆகியோரின் அருமைத் தந்தையாரும், ஸ்ரீஸ்கந்தராஜா (லண்டன்), அருந்தவநாயகி, சோதீஸ்வரன் ஆகியோரின் மாமனாரும், வனஜா, வரதா, வத்சலா, ஸ்ரீகரன், சௌதாமினி ஆகியோரின் பேரனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (6 - 09 - 93) நண்பகல் 2 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக நல்லூர் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

கோ. ஸ்ரீஸ்கந்தராஜா (மகன்)

141, பருத்தித்துறை வீதி,

நல்லூர்.

(27206)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 06-09-1993 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org